Registered No. M. 878.

323

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞ்ஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கிலமீ
15உயில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 3. } 1912ளு டிசம்பர்மீ 15உ / பரீதாபிளு மார்கழிமீ 1உ { பகுதி 8.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ. 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.
## (CONTENTS.)


1. மாதுஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மையார்—ப. நா. ௨௨௧
A short sketch of the life of Madame Blavatsky
By P. Narayana Iyer.

2. ஸன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்—ப. நா. ௨௩௭
Instruction to Occultists—By P. Narayana Iyer.

3. இராமாயண சதாபுருஷர்களின் குணநிசயங்கள் / பி. எஸ். ஸுப்ரஹ்மண்ய ஐயர். ௨௪௧
Personnel of the Ramayana—By P. S. Subramanya Iyer.

4. ஸஹாரா பாலைவனத்தைக் கடலாக்குதல்—ஆத்மநாதன். ௨௪௭
The Sahara desert to be converted into ocean.

5. பிறகுத் தள்ளுண்ட ஜாதியாரின் நிலைமையை நலப்படுத்தும் முறை—சிவராமன் ௨௪௯
The suggestions for uplift of the lower classes.

6. புத்தகவரவு—பத்திராதிபர் ௨௫௨
Review of Books—Editor.

7. பத்திரிகை வரவு—பத்திராதிபர். ௨௫௫
Review of Paper—Editor.

8. சமாசாரம்—பத்திராதிபர். ௨௫௬
News—Editor.

9. பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம்.
Patanjala Yoga Sutra.



## பிரஜாநுகூலன்.

மாதந்தோறும் வெளிவருகிறது. புத்தக உருக்கொண்டது. இனிய நடையுடையது. 40 பக்கங்களுள்ளது. உயர்ந்த காகிதம், குறைந்த சந்தா. 1904-ல் ஆரம்பித்தது. படங்களும் அடிக்கடி காணலாம். விவேகம், விநோதம், அநுபவம் விளக்குவதான கதைகளுக்கும், அற்புதமான நாவல்களுக்கும் இப்பத்திரிகை மிகவும் பிரசித்தமானது. வருஷ சந்தா ரூ. 1—4—0. வி. பி. 1—6—0. மாதிரி பத்திரிகை 0—2—6.

| | | | |
|---|---|---|---|
| வித்யா நவநீதம் | 0 | 14 | 0 |
| ஜனமோகன சாதுரியம் | 0 | 5 | 0 |
| நாகரீக பாரிஜாதம் | 0 | 4 | 0 |
| குமாரதிலகம் | 0 | 2 | 0 |
| ஆசையின் முடிவு | 0 | 0 | 9 |
| தகாத யுக்தி | 0 | 0 | 3 |

இவை ஆறும் சேர்த்து வாங்குவோர்க்கு ரூ. 1—6—0க்குத் தரப்படும். இப்புஸ்தகங்கள் பிரஜாநுகூலன் பத்திராதிபரால் எழுதியவைகள்.

### பரிமளா.

பிரஜாநுகூலன் பத்திராதிபரவர்களால் வெளியிடப்பட்டது. புதிய துப்பறியும் தமிழ் நாவல். வங்காளத்திலிருந்து மொழி பெயர்த்தது. இங்கிலீஷ் நாவல்களுக்குச் சமானமாக இது எழுதப்பட்டிருக்கிறது. மிகவும் இனியநடை. வாசிக்க ஆரம்பித்தால், முடிக்காமல் கீழே வைக்க முடியாது. 42 அத்தியாயங்களும் ஐந்து பாகங்களும் கொண்டது விலை மிகவும் குறைவு 10 அணா.

S. G. இராமாநுஜலு நாயுடு, பிரஜாநுகூலன் பத்திராதிபர்.
612, மேலடையவளஞ்சான் தெரு ஸ்ரீரங்கம், திருச்சி.

## ADVERTISEMENT.

### அறிவிப்பு.

### உயர்ந்த புத்தகங்கள்! குறைந்தவிலை!

உபநிஷத் அர்த்ததீபிகை என்னும் பெயரால் பிரசித்தம் செய்யப்பெற்ற உபநிஷத்துக்களும், சூத்திரார்த்ததீபிகை என்னும் பெயரால் வெளிவந்த வேதாந்தசூத்ரபாஷ்யம் 9 பாகங்களும், அடியிற்கண்ட குறைந்த விலைக்குச் சொற்பகாலம் விற்கப்படும். வேண்டியவர்கள் தஞ்சாவூரில் கோவிந்தன் அண்ட் பிரதர்ஸ் கம்பெனியிலிருந்தும், சென்னை தம்புசெட்டித் தெரு ரிப்பன்பிரஸ்ஸிலிருந்தும், அடியில் கையொப்பமிட்டிருக்கிறவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

### புத்தகங்களின் விவரம்.

இவைகளில் ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ்பாஷ்யங்களும் குறிப்புரைகளும் அடங்கியிருக்கின்றன.

| | முன்விலை. | இப்போதியவிலை. |
|---|---|---|
| | ரு அ ப | ரு அ ப |
| ஈசோபநிஷத் | 1—8 —0 | 0—8 —0 |
| கேநோபநிஷத் | 1—12—0 | 0—10—0 |
| கடம் | 4—0 —0 | 1—8 —0 |
| முண்டகம் | 2—8 —0 | 1—0 —0 |
| மாண்டூக்யம் கவுடபாதர் அவர்களுடைய காரிகையுடன் தமிழில் | 3—8 —0 | 1—8 —0 |
| தைத்திரீயம் | 6—0 —0 | 2—0 —0 |
| சூத்ரார்த்ததீபிகை 9ஸஞ்சிகை | 6—12—0 | 2—4 —0 |

தபால்சார்ஜ் பிரத்யேகம்.

அ. சிவராவ்.

ரிடைர்டு டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்ட்ரார்,
61 நிர். கச்சேரி ரோட்,
மைலாப்பூர்.

## NOTICE.

A Theosophical Book Depot has been opened at the *Hall of Theosophy, Madura* for sale of English and Tamil Theosophical books which are sold very cheap.

V. VENCUSAMI AIYAR,
Manager.
Theosophical Book Depot, Madura.

## புஸ்தகம், துண்டுப் பத்திரிகைகள் விளம்பரம்.

| | |
|---|---|
| ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil) | 1-0-0 |
| பிராசீந தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வமிசாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமத தூஷண பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| கடோபநிஷத் தமிழ்மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| சுவேதாசுவதரோபநிஷத் ஷை | 0-3-0 |
| ஐதரேயோபநிஷத் ஷை | 0-2-0 |
| மௌநவாக்கு | 0-2-0 |
| சந்மார்க்கதீபம் | 0-2-0 |
| ஈசோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-1-0 |
| அந்நிபெஸண்டு அம்மையார் சரித்திரம் (செய்யுள்) | 0-1-0 |
| டில்லிதர்பார் மஹோத்ஸவம் | 0-1-0 |
| வெள்ளியம்பலம் என்னும் ஞாநிகளின்சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும் | 0-1-0 |
| வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களின் சரித்திரச்சுருக்கம் | 0-0-6 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மவித்யை (ஆங்கிலத்தில்) | 0-0-3 |
| சிராத்தம் | 0-0-3 |
| சந்மார்க்க சபையை நடத்தும் முறை | 0-0-3 |
| பிரஹ்மஞாந சபையின் யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| அஷ்டமி பிரதக்ஷிணம் | 0-0-1 |
| பிரஹ்மஞாந சபை | 0-0-1 |
| தசவதாரங்களின் உண்மை | 0-0-3 |
| மஹாத்மாக்களும், அவர்களை அடையும் மார்க்கமும் | 0-0-3 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தபாற் கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் மதுரை தியஸாபிகல் ஸொஸைட்டி பிரெஸிடெண்டு ப. நாராயணையரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.



H. P. BLAVATSKY.

329

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 3. { 1912ஞு டிசம்பர்மீ 15உ
பரிதாபிஞு மார்கழிமீ 1உ } பகுதி 8.

## மாதுஸ்ரீ ஹெலிநாம்பாள் அம்மையார்.

இந்தியாவின் வடக்கிலுள்ள ஹிமாசலத்தில் வஸிக்கின்ற மஹாத்மாக்களின் ஆக்ஞைப்படி, உலகத்திற்கு ஞானம் பயக்கும்படியான கருவியாக பிரஹ்மஞான சபையை ஸ்தாபித்த புண்ணியரில் ருஷியாதேசத்தினராகிய மாதுஸ்ரீ ஹேலிநாம்பாள் அம்மையார் (H.P.B.) ஒருவர். மற்றவர் அமெரிக்காவில் ஐக்ய மாகாணத்தினரான ஸ்ரீமான் ஆல்காட்டு என்பாராவர். முன்னவர் ஞானயோகி என்றும் பின்னவர் கர்மயோகி என்றும் அறிஞர்களால் கருதப்பெறுவர். ஹெலிகாம்பாள் அம்மையார் 1831ஞு ஜூலைமீ 30-31 இரவில் பிறந்தார். ஹான்ஸ் என்ற உயர்ந்த அந்தஸ்துள்ள குடும்பத்தினர். பிறந்த தருவாயில், மெலிந்த பல ஹீனமான குழந்தையாக இருந்தனர். அக்குழந்தை உடனே இறக்குமென்றே அநேகர் மதித்தனர். கிரேக் கிறீஸ்து சமய ஸம்பிரதாயப்படி, இறக்குமுன் ஞானஸ்நானம் (Baptism) ஒரு குழந்தை பெருவிடில் அது நரகத்தைத்தான் அடையும் என்பது நம்பிக்கை; ஆகையால் அந்தப் பயத்துடன், உடனே இக்குழந்தைக்கு ஞானஸ்நானம் செய்தார்கள். அக்காலத்தில் அதைச் செய்துவைத்துக்கொண்டிருந்த உபாத்தியாயருடைய வெளி அங்கியானது, அருகாண்மையில் இருந்த விளக்குச்சுடர் விழ, நெருப்புப்பட்டு அழிந்தது. அவருக்கும்

தீயால் புண் ஏற்பட்டது. இது ஒரு அபசகுநமாக அப்போதிருந்த வர்கள் நினைத்தார்கள். பின்பு பயந்திருந்தபடி குழந்தை இறக்காமல், மேன்மேலும் பலமுள்ள குழந்தையாக விருத்தி யடைந்து வந்தது. ஆனால், மஹாதுஷ்டத்தனமும் பிடிவாதமு முள்ளவர். பால்யமுதல், திவ்யதிருஷ்டியும் (Clairvoyance) சிறு தேவதைகளுடன் (Nature Spirits) உறவும் உடையவராகஇருந்து, அம்மையார் அற்புதமான வேடிக்கைகளும் விளையாட்டுகளும் செய்துவந்தனர். "இதோபார், இந்தமரத்தைப் பட்டுப்போகும்படி செய்வேன்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, அருகில் செழிப்பாய் பூ, காய், கனிகளுள்ள மரம் பட்டுப்போகும். அந்த வீட்டில் நெருப்புப் பிடிக்கிற தென்பார். உடனே அந்தவீடு நெருப் பால் வெந்து மடியும். குழந்தையில் மெல்லியதான தேகம் பின்பு இரும்புபோல கெட்டியாக ஏற்பட்டது. ஆண்மக்களைப்போலவே இருபுறத்திலும் காலைத்தொங்கவிட்டு, முரட்டுத்தனமான இராணு வக்குதிரைகள்மீது ஏறிச்சவாரிசெய்ய மிகவும் பிரீதியுடையராயினர். இவர் முரட்டுச் சுபாவத்தையும், பிடிவாதத்தையும் கண்டு, இவ ருடைய பாதுகாப்பு ஸ்திரீ (Governess) ஒருத்தி, வேடிக்கையாக "ஒரு கிழவன்கூட உன்னைக் கல்யாணம்செய்துகொள்ளமாட்டான்" என்றனள். அப்போது இவருக்கு வயது 17. உடனே, ஒரு கிழ வனை 1848௵ ஜுலைமீ 7௳ மணம்புரிந்தனர். விவாகக் கிரியை கள் மாத்திரம் நடந்தன. ஸ்திரீபுமான்களாக ஒருநாள் கூட வாழ்ந்தா ரில்லை. உடனே அந்த ஸம்பந்தத்தை அம்மையார் வெறுத் தனர். விவாகமாகி மூன்றுமாஸத்திற்குள்ளெல்லாம் மாறுவேஷம் பூண்டு வீட்டை விட்டு வெளியேறி, கப்பல்யாத்திரை செய்தனர். குப்தசாஸ்திர விஷயங்களின் ஆராய்ச்சிசெய்ய விரும்பினவராகி இவர் பலதேசம் சென்றனர்.எகிப்துக்குப்போயினர்.பின்பு 1857௵ தம்முடைய பிதாவை லண்டன் நகரத்தில் சந்தித்தனர். இரு வரும் பேசிக்கொண்டிருக்கையில், தமக்கு அடிக்கடி காட்சியில் தோன்றிய மஹாபுருஷனைக் கண்டனர். உடனே அவரை நோக் கிச்செல்ல முயன்றனர். அவர் அவ்விதம் வேண்டாம் என ஸம் க்ஞை காட்டினர். மறுநாள் அம்மையார் முந்திய தினம் தாம் கண்டகாட்சியைப்பற்றி ஏகாந்தமாகச் சிந்திக்கவேண்டுமெனக் கருதி

ஹைட்பார்க்கு (Hyde park) என்ற தோட்டத்தில் உலாவினர். அப்போது அந்த மஹாபுருஷர் திரும்பவும் தோன்றி விஸ்தாரமாக அம்மையாருடன் ஸம்பாஷித்தனர். "நாம் நேரில் உம்மைச் சந்திக்க வேண்டுமென விரும்பினோம். பிரஹ்மக்ஞாந சபை ஒன்றை உலகரக்ஷணார்த்தமாக ஸ்தாபிக்க உத்தேசித்துள்ளோம். அதை ஸ்தாபிக்க உலகில் நீவிர் வெளிநின்று வேலை செய்யவேண்டும். அதில சங்கடங்கள் உண்டாகும், அதை உத்தேசித்து, மூன்று வருஷம் திபேத்து என்னும் தேசத்தில் நீவிர் வஸிக்கவேண்டும். அப்போது, அச்சபையின் விஷயங்கள் எல்லாம் நன்கு அறிந்து கொள்ளலாம். ஸந்மார்க்கமுறை சம்பந்தமான ரஹஸ்யங்களைத் தெரிந்துகொள்ளலாம். இவ்விதமாக வரப்போகும் கார்யத்திற்கு ஆயத்தமாகலாம்" என்று ஆக்ஞாபித்தார். "சந்திரிகையுள்ள ஒரு இரவில் வெகுநாள் காணவேண்டுமென விரும்பியிருந்த மஹாபுருஷரை 1857ஸு ஆகஸ்டுமீ த்தில், லண்டன் பட்டணத்தின் பாம்பு வளைவு (The Serpentine) என்ற இடத்தில் கண்ணுற்றேன்" என்பதாக, அம்மையார் வைத்திருந்த நிகசரி ஜந்திரியில் வரைந்துள்ளது.

சிலகாலத்திற்குப் பின்னர் 1857ஸுத்தில், பிதாவின் அநுமதி பெற்று, உலகயாத்திரை செய்தனர். 17 வருஷகாலம் அப்படி பலதேசங்கள் சுற்றினர். 1857ஸுத்தில் திபேத்து போயினர். திடீரென 1858ஸுத்தில் ருஷியாவுக்குத் திரும்பினர். பின்பு வெளிதேசங்களுக்குப்போகிறதும் வருகிறதுமாக 1863ஸு வரை திரிந்தனர். அதன்பிறகு 6 வருஷகாலம் அதாவது 1870ஸு வரை இன்னவிடத்திற்குப் போயினர் என ஒருவருக்கும் தெரியாமல் ஆசியாக்கண்டத்திலுள்ள மலைப்பிரதேசங்களில் ஸஞ்சரித்தனர். அவர் மரணமாயினரென்றே அவர் பந்துக்கள் நினைத்தார்கள். 1870ஸு நவம்பர்மீ 7உயில், ருஷியா தேசத்திலுள்ள ஒடிஸா நகரிலுள்ள அம்மையாரின், அத்தை (பிதாவின் சகோதரி) யினிடம் திபெத்து தேசத்தினின்று ஒரு ஆள் வந்து ஒரு கடிதத்தைக் கொடுத்து உடனே மறைந்தான். அந்தக் கடிதத்தில் ஒரு பாகத்தில் அடியில் வருமாறு ஒரு குறிப்பு எழுதப்பெற்

றிருந்தது. அதில் "K. H," என்று பெயர்வழங்கும் மஹாத்மாவின் கையெழுத்திருந்தது. "H. P. B. என்பாரின் பெருமைதங்கிய பந்துக்கள் கொஞ்சமேனும் கவலை கொள்ளவேண்டாம். அவரைப் பற்றி பயமும் வியஸநமும் கொள்ளற்க. H. P. B. அம்மை ஜீவித்திருக்கின்றார். சௌக்கியமாக விருக்கின்றார் எனவும், தூரமானதும் அந்யமானதுமான தேசத்தில் இருந்தபோதிலும் சுகமாக வஸிக்கிறாரென்றும், இதன் மூலமாய்த் தம்முடைய பிரியமுள்ள பந்துக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றார். 18 அமாவாஸ்யைகள் கழியுமுன், தம்முடைய பந்துக்களை நேரில் பார்ப்பார்"

பின்பு, இக்கடிதத்திற் கண்டபடி 1872௵த்தில், ஒடிஸா நகரத்திற்கு அம்மையார் திரும்பி வந்தனர். இந்த யாத்திரையில், வந்த கப்பல் உடைந்து அபாயத்துக்காளாகி, கேய்ரோ பட்டணத்தி லிறங்கி, சாப்பாட்டுக் கடை (Hotel) வைத்திருந்த கூலூம்பு என்பவர்களுடன் தங்கியிருந்தனர். பின்பு தம்முடைய பந்துக்களையும் சிநேகிதர்களையும் பார்த்துவிட்டு, பிரான்சு தேசத்துக்குப் போயினர். பின்பு தம்முடன் தொழில் செய்வதற்கு ஏற்பட்ட ஸ்ரீமாந் ஆல்காட்டு என்பாரைச் சந்திக்க அமெரிக்காவுக்குப் பிரயாணமாயினர். ஐக்யமாகாணத்தில் அவரைக்கண்டு களித்து சிநேகம் செய்துகொண்டு அவருடன் பிரஹ்மக்ஞாந சபையை 1875௵ நவம்பர்மீ 17௳யில் ஸ்தாபித்ததும், பின்பு அவருடன் இந்தியாவுக்கு வந்ததும், பின் நடந்த மற்ற விஷயங்களும், ஸ்ரீமாந் ஆல்காட்டு என்பவர்களின் சரிதத்தில் விஸ்தாரமாக முன்னர் எழுதியுள்ளோம். அமெரிக்காவில் இருக்கும்பொழுதுதான் "பிரஹ்மவித்யை வெளிப்படல்" (Isis Unveiled) என்ற உயர்நலம் அமைந்த ஞாநக் களஞ்சியம் என்று சொல்லத்தகும் ஒரு நூலை வெளியிட்டனர். இதின்கண், ஆசியாக்கண்டத்தின் முக்கியமாக இந்தியர்களின் ஞாந உயர்வும் மஹரிஷிகளின் ஞாந உபதேசங்களும், சித்திகளும் இவை போன்ற பல விஷயங்கள் விஸ்தாரமாகச் சொல்லப்பெற்றிருக்கின்றன. இது வெளிவந்த காலத்தில் உலகத்தில் முக்யமாக மேல்நாட்டிலுள்ள வித்வாங்கள் இதின்கண்ணுள்ள ஞாந விஷயங்களின்

பெருக்கத்தைக் கண்டு பிரமித்து வியந்தனர். தற்சமயம் மேல் நாட்டில் நாஸ்திகமதம் என்னும்

"சண்ட மாருதம் சுழித்து அடித் தார்த்த
உலோகா யதன் எனும்
ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிஷம் எய்தி"

எங்கும் வியாபித்திருந்தது. எல்லா அறிவும், எல்லா கலமும் தங்களிடமே இருந்திருக்கின்றன வென்று மேல்நாட்டினர் கருவங்கொண்டு மதிமயங்கித் திரிந்தனர். இந்த அற்புதமான ஞானநூல் வெளிவரவே, ஆசியாக்கண்டத்தினரின் ஞானப்பயிற்சியையும் மஹிமையையும் தெளிவாக யாவரும் அறிந்துகொள்ளும்படி ஏற்பட்டது. இவ்வருமை பெருமை தங்கிய நூலே உலகத்தின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான எல்லைக் கல்லாக அறிஞர்கள் மதித்தார்கள்.

முன் பிரஸ்தாபித்த கூலூம்பு ஸ்திரீபுமாக் இருவர்களும் அம்மையாரைச் சரணமடைந்து அம்மையாரால் போஷிக்கப்பட்டனர். ஆதியாற்றில் இவர்கள் அம்மையாருடன் கூடவே வஸித்தார்கள். சில துஷ்டர்களின் போதனையின்மேல், சில திரவிய ஆசைக்குட்பட்டு, அம்மையார் இல்லாத காலத்தில், சதியோசனைசெய்து சில மோசமான கட்டுப்பாடான சங்கதிகளை உண்டுபண்ணியும், அக்கிரமங்கள் செய்யவும் துணிந்தார்கள். அதனால் இவர்கள் ஆதியாற்றின் பங்களாவினின்று துரத்தப்பெற்றார்கள். அதன்மேல் சில கிறீஸ்து பாதிரிகளுடன் சேர்ந்து சில அவதூறான விஷயங்களை அம்மையாரின் மேல் கற்பித்தார்கள். இவர்களின் அக்கிரமமும், இவர் செய்துவந்த கபடநாட்டமான மோசங்களும், பிரஹ்மஞானசபையாரால் வெளிவந்திருக்கின்ற புத்தகங்களில் பரக்கக் காணலாம்.

பின்பு தேஹ அசௌக்கியமாயிருந்தபடியால் இந்தியாவை விட்டு அம்மையார் இங்கிலாந்துக்குப்போய் சிலவருஷங்கள் ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் வஸித்தார். அக்காலத்தில் பிரஹ்மஞானசபையின் முதல் நூலெனப் பிரக்யாதிபெற்ற "குப்த சாஸ்

திரம்" (Secret Doctrine) என்ற ஒரு ஞான நூலைத் தம்முடைய குருநாதனின் அநுக்கிரஹத்தால் எழுதிப் பிரஸித்தம் செய்தனர். இப்புஸ்தகத்தின் உற்பத்தி வரலாற்றைப் பற்றியும் அதின் அமைப்பைப் பற்றியும், அம்மையாருடைய ஞானமுதிர்ச்சியையும் மஹிமையையும் பற்றியும், அம்மையாருடன் கூடப் பழகி வஸித்திருந்தவர்களும் ஸ்நேகிதர்களும் ஆங்கிலத்தில் பல புஸ்தகங்கள் எழுதியுள்ளார்கள்.* அவைகளினின்று பின் ஒரு சமயத்தில் முக்கியமான விஷயங்களை எடுத்து வெளிப்படுத்துவோம்.

கடைசியாக அம்மையார் இங்கிலாண்டில் லண்டன் நகரத்தில் வஸித்தனர். 1891ஆ எப்ரல்மீ 26 தேதியில் அம்மையாருக்கு ஜ்வரங்கண்டது. சிலநாள் ஜ்வரத்தால் கஷ்டப்பட்டு 1891ஆ மேமீ 8உ பகலில் தேஹவியோகமானர்.

அதன்மேல் அம்மையார் சரீரம் அம்மையார் வேண்டுகோளின்படி தஹநஞ் செய்யப்பட்டது. அம்மையார் இரும்புபோன்ற சரீரத்தை உடையவர். ஸிம்ஹம்போன்ற மநோதிரர், எந்தக் கஷ்டம் வந்தாலும் எந்தத் துக்கம் நேர்ந்தாலும் மநம் சலியாதவராய்ப் பாறைபோல் எதிர்த்து நிற்கும் ஸ்வபாவமுடையவர். ஸத்யத்தைமேநாடி உலகம் நலம்பட வாழவேண்டுமென தம்முடைய ஆயுள் நாள் முழுமையையும் தம்முடைய குருநாதனுக்கு அர்ப்பணம் செய்து அநேக நற்கர்மங்கள்செய்தனர். தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தம்மால் நிறுவப்பெற்ற பிரஹ்மஞான சபைக்குத் தத்தம் செய்தனர். ஸந்மார்க்க முறையில் வ்யக்தமாய் உண்மை தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த அநேகரை நல்வழிப் படுத்தி

---

* Vide "H. P. B, and the Masters of Wisdom" by Annie Besant.

"Incidents in the Life of Madame Blavatsky" by A. P. Sinnet.

"Reminiscenes of Madame Blavatsky" by Countess Watchmeischter.

"In Memory of H. P. B." by Her Pupils.

ளர். அவர்களுக்கு ஞானோபதேசம் செய்தனர். இவர்களால் உலகத்திற்கு வெளிவந்த ஞான நூல்கள் பல. அவையெல்லாம் போற்றத்தக்கவை. அவைகளுள் முன் பிரஸ்தாபித்த “பிரஹ்ம வித்யை வெளிப்படல்” (Isis Unveiled) என்ற புஸ்தகமும், “குப்தசாஸ்திரம்”(Secret Doctrine)என்ற ஞானக்கருவூலமும்உலகத் தில் ஆங்கில பாஷையுள்ளவரையும் மஹிமைபெற்று விளங்குமென உறுதியாய்ச் சொல்லலாம். வெள்ளியம்பலம் என்பது ஹிமாசலத் தின்கண் உள்ள வித்தர்களின் கூட்டம். அதின் ஞான தூதராக இக்காலத்தில் பிரகாசித்த புண்யர் இவர். தாம் ஸ்தாபித்த பிரஹ் மஞான சபையை இன்னும் அதிக மேன்மை பெறும்படியாகச் செய்யும் பொருட்டு மறுபடியும் இப்போது ஒரு புருஷ சரீரம் எடுத்திருக்கிறாரென்றும் சீக்கிரம் வெளிப்படுவாரென்றும் அறிஞர் கள் சொல்லுகிறார்கள்.

“ஊயேறி வீழ்க்தென் னடாத்துகிலென் ஞாலிக்குப்
பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலென்—றேயார்
பெருமை சிறுமையிலெ பின்னுமுன்னு மில்லை
வரைவற்று வேண்டியசெய் வார்”—ஒழிவிலொடுக்கம்.

ப. நாராயண ஐயர்.

---

## நன்மொழி.

---

123\. தானென் றவனென் றிரண்டாகுந் தத்துவந்
தானென் றவனென் றிரண்டுந் தனிற்கண்டு
தானென்ற பூவை யவனடி சாத்தினு
னானென் றவனென்கை நல்லதொன் றன்றே.—திருமூலர்.

## ஸந்மார்க்க முறையில் ஹிதோபதேசம்.

(201-ம் பக்கத் தொடர்ச்சி.)

8. நூற்றுக்கணக்கான அநேகவிதிகளினின்று மேற்கண்டவைகள் எடுத்து இவ்விடத்தில் உரைக்கப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட விதிகள் மேல்நாட்டு நாகரீகம் நடைபெறும் இக்காலத்தில் மிகவும் பயன்படக்கூடியவை. அந்நாகரீகம் போட்டியும் போராட்டமும் பற்றியதாக நிகழ்கின்றது. பால்யகாலம் முதலே சிறுவர்களும் சிறுமிகளும் ஒருவரையொருவர் உலகில் முந்தவேண்டும் என்ற போட்டிதர்மம் வற்புறுத்தி உபதேசிக்கப்படுகிறது. எவ்விதத்திலும் பிறரை மேற்கொள்ளவேண்டும் என்ற உபதேசம் ஒவ்வொருவர் காதிலும் பறையறையப்படுகிறது. இப்போட்டியை "சிநேகமான போட்டி" (Friendly rivalry) யென்று போலி அறிஞர்கள் சொல்லுகிறார்கள். உலகம் அபிவிருத்தியாதலுக்கு நலமுள்ள தர்மம் இதுதான் எனப் பன்முறை ஆரவாரம் செய்கிறார்கள்.

### ஸந்மார்க்க முறையும், குப்தவித்யைகளும்.

பலவிதமான வித்யைகளுண்டு. அவைகளுள் நான்கு பிரஸித்தமானவை.

(1) யக்ஞவித்யை:— இயற்கையாகவே ஜகத்தில் குப்தமாக சில சக்திகள் உள்ளன. சில குறித்த கர்மங்கள் அல்லது கிரியைகளைச் செய்வதினால் அச்சக்திகளின் ஞானத்தை ஒருவன் பெறலாம். அச்சக்திகளைத் தன்னிடம் உண்டுபண்ணிக் கொள்ளலாம்.

(2) மஹாவித்யை:—முக்கியமாய் இது தாந்த்ரிகவித்யையாக வழங்குகிறது. இதில் சூந்யம் வைத்தல் போன்ற துராசார மார்க்கங்கள் அதிகமாகவுள்ளன. வாமாசார மார்க்கமும் இதில் அடங்கும்.

(3) குஹ்யவித்யை:—ஆகாசத்தில் இருக்கின்ற சில குப்தமான சக்திகளின் அறிவு. முக்கியமாய் மந்த்ரங்கள், ராகங்கள் முதலியவைகளில் அமைந்துள்ள சக்திகள். இவைகளுக்கும் பிரபஞ்சத்திலுள்ள மற்ற சக்திகளுக்கும் ஒரு விதமான சம்பந்தமுண்டு.

(4) ஆத்மவித்யை:—ஆத்மாவை அறியும் வித்யை. ஸத்மார்க்கத்திற் பயிலுகிறவன் இதைத்தான் முக்கியமாகக் கொண்டாடுவான். மற்ற வித்யைகளெல்லாவற்றையும் உத்தேசிக்க ஆத்மவித்யை ஒன்றைத்தான் மேலாகக்கொள்ளுவான். இதுவே பரவித்யை. மற்றவையெல்லாம் எத்தன்மைத்தாயினும் அபர வித்யையேயாம். அவைகளெல்லாம் பரவித்யைக்குச் சாதநமாக அங்கீகரிக்கத்தக்கவைதான். இப் பரவித்யையே பிரஹ்மக்ஞாந தர்சநம். இப் பரவித்யையை அநுஷ்டிப்பதில் ஒவ்வொருவனும் தன்னால் இயன்றவளவு பயிலலாம், தன்னால் சுமக்கக்கூடாத பாரத்தைச் சுமக்க வேண்டுவதின்றும். புத்தர் என்ன, கிறிஸ்து என்ன, சங்கராசாரியர் என்ன அத்தன்மையான மஹாத்மாக்களாக ஒருவனுக்கு எளிதில் ஒரே ஜந்மத்தில் கூடாது. ஆயினும் ஆத்மவித்யையையறிந்து பொதுஜந கைங்கர்யம் செய்தலுக்குத் தன்னை ஆயத்தம் செய்து கொள்ளலாம். பிறர் நலம்பெற வாழலாமன்றோ?

“நீ ஸூர்யனாக இருக்க இயலா விடினும் ஒரு தணிந்த கிரஹமாக இருத்தலாகுமன்றோ? சிஷ்யனே! என்றும் பரிசுத்தமான ஹிமாசலத்தின் சிகரத்தின் மேல் மத்தியாஹ்நத்தில் ஸூர்யனைப் போல ஜ்வலிக்கும் திறமை உனக்கில்லாவிடினும், உனக்குத் தகுதியான தாழ்மையான வேறொரு நெறி இல்லையா? அதை நாடு. இருட்டில் நடக்கின்ற யாத்திரைக்காரர்களுக்கு அந்தி நக்ஷத்திரம் வழிகாட்டுமாறு போல் நீயும் உன்னால் இயன்றவரை உன்னண்டையுள்ளவர்க்கு வழிகாட்டுவாய். . . .”

“உன்னைவிட மெலியானைத் தேடிப்பார். அவன் துக்கத்தில் மூழ்கி மருளால் மயங்கி புத்திகெட்டு ஞாநமுறை தெரியாமல் தவிப்பான். ஆறுதலும் தேறுதலும் நன்னம்பிக்கையு முண்டாகும்படி உபதேசிக்கக் கூடிய குரு இல்லாமல் தயங்கி நிற்பான். அத்தன்மையானை நாடி உனக்குத் தெரிந்ததை அவனுக்கு உபதேசம் செய்”—மௌநவாக்கு.

9. சித்திகள் எல்லாரும் சாதிக்கக் கூடியவைகளல்ல. அவைகளைப் பெறுதற்கு உயர்ந்த தீவிர பயிற்சி வேண்டும்; எத்தனையோ கஷ்டங்களைத் தாண்டவேண்டும். ஸந்மார்க்கம் என்பது அத்தன்மையானதன்று. இதில் செயலிலும் எண்ணத்திலும் சுயநலம் பாராட்டாமல் ஒருவன் ஒழுகவேண்டும். இம்முறையில் பிரவேசிக்கிறவன் தனக்கென்று உலகத்தில் வாழான். தன்னுயிர் ஓம்பான்.

தன்னலம் கருதான். பிறர் நலம்பெற வாழ்வான். ஆனால் ஆரம்பத்தில் தடுமாற்றம் பெறுவான். அப்போது அவனுக்கு மன்னிப்பு உண்டு.

உண்மையான சிஷ்யனாக அங்கீகரிக்கப் படுவானாகில் தன்னை முற்றும் மறத்தல் வேண்டும். "நான்," "எனது," என்ற பாவம் முற்றும் அறவேண்டும்*. ஈசுவர கைங்கரியம் புரியும் தொழிலில் தானும் ஒருவனாகவேண்டும்.

இதன் பிறகு இவன் முன்னர் இரண்டு லக்ஷியங்கள் ஏற்படும். இரண்டு மார்க்கங்கள் உள்ளன. ஒன்று, கஷ்டப்பட்டு அநேக ஜந்மங்கள் எடுத்துப் படிப்படியாய் மேன்மேலே ஞானமுறையில் ஏறி சுவர்க்கலோகத்தில் இளைப்பாறுகிறதென்ற சுகத்தையுங்கூட நாடாமல் தீவ்ரமாய் சுவர்ண ஏணியின் வழியாய் ஏறி மஹாத்மாவாக ஆதல். மற்றொன்று, இவ்வுயர்ந்த மார்க்கத்தில் புகுந்தும் கீழ்நோக்காய் நழுவுதலாம். ஒருபடி தவறவே கீழே விழுவான். வாமமார்க்கத்தில் புகுவான், கறுவித்யையைப் பயிலுவான், அதோகதியையடைவான்.

10. அதனால் ஸந்மார்க்கத்தில் நடைபெறுகிறவன் மிகவும் கவனமாயிருத்தல் வேண்டும். மநத்தால்தான் ஒருவன் உயர்வுபெறுவதும், தாழ்வடைதலுமாம். "மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:" என்ற அமிர்தபிந்தூபநிஷத் வாக்கியம் இங்கு கவனிக்கத்தக்கது. இதன்பொருள், மனிதன் மோக்ஷம் அடைதலும் பந்தமடைதலும் மநத்தினால் என்று அறிக. மநஸ் இருவகைத்து: உயர் லக்ஷியமுள்ளதாய் ஞானப்பயிற்சியின் நோக்காய் சுயலாபங்களில் பற்றற்றதாய் இருப்பது ஒன்று. கீழான விஷயங்களில், முக்கியமாய் சரீர அபிமானம் பெற்றதாய் விஷய நுகர்ச்சியாகும் உலககாமனைகளிலும் அழுந்தியதாய் உள்ளது மற்றொன்று. முந்தியது காமரஹிதமானதென்றும், பிந்தியது காமஸஹித

*"எனதென்பதும்போய் யான்எனல்போய் எல்லாம்இறந்த இடம்காட்டும் நினதென்பதும்போய் நீஎனல்போய் நிற்கும்நிலை" என்ற தாயுமானவர் வசனம் இங்கு கவனிக்கத்தக்கது.

மானதென்றும் சொல்லப்பெறும். மேல்நோக்கியும் கீழ்நோக்கியும் மநம் இருக்கக்கூடியதால், மேல் லக்ஷியமான உயர்பதவிக்கும் கீழ் லக்ஷியமான உலகவிஷயசுகத்திற்கும் மத்தியில் மநம் ஊசலாடுகின்றது. மநம் தெளிவுபெற்று புத்தியுடன் சேரவே கீழ்நோக்கியகதி அறுபடுகின்றது. புத்தியினின்று விலகி மநம் விஷயநுகர்ச்சியில் சம்பந்தப்படவே மேல் நோக்கிய கதி அறுபடுகின்றது. இவ்விரண்டு கதிகள் கடோபநிஷத்தில், வசப்பட்ட குதிரையின் கதிக்கும் வசப்படாத குதிரையின் கதிக்கும் உவமிக்கப்பட்டிருக்கின்றன. குருவானவன் ஹிருதயத்திலிருக்கின்ற ஆத்மா. அதுவே கட உபநிஷத்தில் ரதஸ்வாமியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு முறையில் ஆத்மாவை நோக்கவேண்டும். மற்றொரு முறையில், அநாத்மாவை நோக்கவேண்டும். இவ்விடத்தில் அநாத்மாவென்பது பிரபஞ்ச வாழ்வு. மநம் இரண்டிலும் நடைபெறமுடியாது. ஒன்றை விட்டே தீரவேண்டும். பாலுக்காவலாகவும் பூனைக்குத் தோழனுகவும் இருத்தல்கூடாது. என்றும் ஆத்மாவை நோக்கி மநம் நடைபெறுதல் சிரமமான காரியம். கீழான காமனைகள் மநத்தைக் கீழே இழுக்க எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. காமனைகளைப் பூர்ணமாக ஜயித்தாலல்லாமல் மேல்நோக்குவது முடியாதகாரியம். அப்படி நோக்குவதில் மநத்திற்கு நேரிடும் சங்கடங்களுக்குக் கணக்கில்லை. இதனாலன்றோ, திருமூலரும் அடியில்வருமாறு உபதேசித்துள்ளார்?

"ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள்
ஈசனொ டாயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆநந்த மாமே."

ஒரு நாளில் ஒரு முயற்சியில் ஒரு ஜந்மத்தில் ஆசையை விடுதல் முடியாது. ஆனால் அதை விடுதலுக்கின்றே வித்திடல் வேண்டும்.

இன்றே முயற்சி புரிய ஆரம்பித்தல் வேண்டும். முதலில் ஆசைகளைத் தூய்மைப்படுத்தல் வேண்டும். கீழானவைகளைத் தவிர்த்தும், மேலானவைகளை ஸ்வீகரித்தும் வரவேண்டும். பின்பு கொஞ்சம் கொஞ்சமாய் ஆசை விஷயங்களில் 'தனக்கு' என்ற பற்றைத்

துறக்க வேண்டும். பின்பு பற்றை முற்றும் விடவேண்டும். ஆசையை அதாவது பற்றை விடவேண்டுவதேயல்லாது தொழிலை விடவேண்டுவதில்லை. சரீரம் உள்ள வரையில் கர்மம் செய்தே தீரவேண்டும். ஆனால் பலனில் பற்றற்றிருத்தலே துறவாம். * இதுதான் நேர் வழி. இதுதான் கத்திபோன்ற குறுகிய மார்க்கம்.

"𑌉𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌵𑌰𑌾𑌨𑍍𑌨𑌿𑌬𑍋𑌧𑌤
𑌕𑍍𑌷𑍁𑌰𑌸𑍍𑌯 𑌧𑌾𑌰𑌾 𑌨𑌿𑌶𑌿𑌤𑌾 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾
𑌦𑍁𑌰𑍍𑌗𑌂 𑌪𑌥𑌸𑍍𑌤𑌤𑍍𑌕𑌵𑌯𑍋 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿"॥

"எழுமின்! விழிமின்! பெரியாரை அணுகுமின்! அவரிடம் அறிமின்! தெளிமின்! தீட்டிய கத்தி முனைபோல் ஸந்மார்க்கம் உள்ளது. கஷ்டஸாத்தியமானது."—கடோபநிஷத்

மேல்நாட்டு ஸந்மார்க்க முறை ஸ்தாபகராகிய பகவாந் கிறீஸ்து என்பாரும் அடியில் வருமாறு கூறுகிறார். "நீங்கள் எல்லாரும் ஈசுவரனின் புத்திரர்களாவீர்கள். ஈசுவரனைப்போல பூர்ணர்களாய் ஆகவேண்டியவர்கள். அந்நிலைபெற என் வழிபடுமின். உலகசம்பத்துக்களைத் துறமின். ஆசைகளை அறுமின். புத்திரர், பெண்டிர் தாய் தந்தை முதலிய உலகப்பற்றுக்களை விட்ட சுத்தநிர்வாணிகளாக என்னிடம் சேர்மின்."

(இன்னும் வரும்.)

ப. நாராயண ஐயர்.

---

* கீதை பதினெட்டாவது அத்தியாயத்தைப் பார்க்க.

# ராமாயண கதாபுருஷர்களின் குணதிசயங்கள்.

## முக்கியமாய் பரதனைப்பற்றியவை.

(௨௧௯-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

கௌஸல்யை இராமனைப் பார்த்துச் சொன்னதாவது மூத்தவனிருக்க இளையவனுக்குப் பட்டங்கட்டுவது முறையில்லை யென்பது ஒன்று மட்டுந்தான். ஆயினும் "பரதன் முக்காலத்திலும் வேறுபடாது நிறைந்த நல்லகுணத்தையுடையவன். உன்னைக் காட்டிலும் அவன் நல்லவனாகையால் அவன் பட்டமடைந்ததினால் ஒரு குறைவும் நேரவில்லை" என்று நாலு பிள்ளைகளிடத்திலும் ஒரே விதமான அன்பையுடைய கௌஸல்யையானவள் சொன்னாள்.

"நின்னினும் நல்லவன்" என்று கௌஸல்யை சொன்னதுமட்டுமல்ல. இராமன் கங்கையைத் தாண்டி தண்டகாரண்யம் சென்ற பின்னர் அவனை அழைத்து வருவதற்காக பரதன் அயோத்தியிலுள்ள ஜனங்களோடு செல்லுகையில் குஹன் பரதன்பேரில் சந்தேகம் கொண்டு, "தன்னுடைய தாயார் தனக்கு இராஜ்யத்தை சாசுவதமாக ஸம்பாதித்து வைக்காமல் பதினான்கு வருஷமட்டும் ஆளும்படி அமைத்திருக்கிறாள்; இராமனுடன் யுத்தம் செய்து இராஜ்யத்தை எந்நாளும் தன்னுடையதாகச் செய்து கொள்ளும்படி எண்ணி வருகிறான்; இருந்தாலும் வருகிற பரதனைப் பார்ப்போ"மென்று குஹன் அவன் இருக்கு மிடத்தை நோக்கி வருகையில்,

"வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்.

நம்பியுமென் னாயகனை யொக்கின்றா னயனின்றான்
தம்பியையு மொக்கின்றான் றவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தா ரிழைப்பரோ பிழைப்பென்றான்.

உண்டிடுக்க ணொன்றுடையா னுலையாத வன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாம்

கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்க ணெறியென்னத்
தண்டுறைபோர் நாவாயி லொருதனியே தான்வந்தான்.

வந்தெதிரே தொழுதானை வணங்கினன் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத் தழுவினன் றகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்.

தழுவின புளினர் வேந்தன் றாமரைச் செங்க ணானை
எழுவினு முயர்ந்த தோளா யெய்திய தென்னை யென்னா
முழுதல களித்த தந்தை முந்தையோர் முறையி னின்றும்
வழுவின னதனை நீக்க மன்னனைக் கொணர்வான் வந்தேன்.

கேட்டனன் கிராதர் வேந்தன் கிளர்ந்தெழு முயிர னாகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான் விம்மின னுவகை வீங்கத்
தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன் பொய்யி லுள்ளத்தான் புகல லுற்றான்.

தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ழாவரோ தெரியி லம்மா."

(இ-ள்.) நீ இராமனுக்கும் மேலானவன். அவன் கிடையாததை விட்டான். நீ கிடைத்ததை விட்டாய். "புகழினோய்" என்பதை விளிவேற்றுமையாகக் கொண்டால் ஒரு பொருள். அல்லது புகழானது ஒய்கின்ற தன்மையைக் கண்டால் என்று வேறொரு பொருள். புகழாவது:

ந கர்மணா ந ப்ரஜயா தநேந ।
த்யாகேநைகே அம்ருதத்வமாநஶு: ॥

என்பது வேதவசநம்; கர்மத்தைச்செய்தால் அதின்புகழ் சுவர்க்கலோகம் மட்டும்; மகப்பேற்றின் புகழ் பிதுர் லோகம் மட்டும்; தனவான் என்னும் புகழ் இவ்வுலகத்திலிருக்குமட்டுந்தான்; வேண்டாமென் றகற்றுதலாகிய "பரித்யாக"த்தினால்தான் மோக்ஷப்பதவியை அடையலாம். நீ பரித்தியாகம் செய்தவன். நீயே மோக்ஷத்தை அடை

ந்தவன். உனக்குப்புகழ் அயோத்தியை விட்டவுடனே கிடைத்து விட்டது. இராமனுக்குப் புகழ் பதினான்கு வருஷத்திற்குப் பின்னர் கிடைக்கிறதோ கிடைக்கவில்லையோ. உன் தாயார்வார்த்தைக்குள்ளடங்கி நெறிதப்பி உன் தந்தை அளித்த இராஜ்யத்தை நீ விட்டது பிழையாகாது. மேலும்,

"யத்கரோஷி யதஶ்நாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத்।
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்பணம்॥"

என்றபிரகாரம் அதாவது எல்லாவற்றையும் எனக்குக்கொடுவென்று சொல்லுகிறபடி பதினான்கு வருஷத்திற்குப் பிறகு ராஜ்யத்தைக் கைக்கொள்ளப் போகிற பகவானைக்காட்டிலும் எல்லாம் துறந்த பகவானாகிய நீயே சிறந்தவன் என்பது பொருள்.

11. பின்னர் கௌஸல்யை முதலியவர்களைக் குகனும் பரதனும் சந்தித்த பிறகு

"சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற கோசலையைத் தொழுது நோக்கி
வெற்றித்தார்க் குரிசிலிவ ராரென்று குகன்வினவ வேந்தர்வேந்தன்
முற்றத்தான் முதற்றேவி மூன்றுலக மீன்றானை முன்னீன் றானைப்
பெற்றத்தாற் பெருஞ்செல்வம் யான்பிறத்த லாற்றுறந்தபெரியாளென்றான்.

என்றலுமே யடியின்மிசை நெடிதுவீழ்ந் தழுவானை யிவன்யா ரென்று
கன்றுபிரி காராவின் றுயருடைய கொடிவினவக் கழற்கான் மைந்தன்
இன்றுணைவ னிராகவனுக் கிலக்குவற்கு மிளையவற்கு மெனக்கு மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பா னிந்நின்ற குரிசி லென்றான்.

நைவீர லீர்மைந்த ரினித்துயரா லுடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற் றுமன்றே விலங்கற் றிண்டோள்
கைவீரக் களிறனைய காளையிவன் தன்னோடு கலந்து நீங்கள்
ஐவீரு மொருவீரா யகலிடத்தை நெடுங்கால மளித்தி ரென்றாள்.

அறந்தானே யென்கின்ற வயனின்று டனைநோக்கி யைய வன்பின்
நிறைந்தாளை யுரையென்ன நெறிதிறம்பாத் தன்மெய்யை நிற்ப தாக்கி
இறந்தான்றன் னிளந்தேவி யாவர்க்குந் தொழுகுலமா மிராமன் பின்பு
பிறந்தானுமுளனென்னப் பிரியாதான் றனைப்பயந்த பெரியாளென்றான்."

பிறகு பரதன் சித்திரகூடத்தில் இராமனைப் பார்த்தபொழுது

"கோதறத் தவஞ்செய்து குறிப்பி னெய்திய
நாதனைப் பிரிந்தன னவத்து நீங்கினான்
வேதனைத் திருமகன் மெலிகின் றாள்விடு
தூதெனப் பரதனுந் தொழுது தோன்றினான்.

அறந்தனை நினைந்திலை யருளை நீத்தனை
துறந்தனை முறைமையை யென்னுஞ் சொல்லினான்
மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தனன்
இறந்தனன் றாதையை யெதிர்கண் டென்னவே.

உண்டுகொ லுயிரென வொடுங்கி னானுக்
கண்டன னின்றனன் கண்ணன் கண்ணெனும்
புண்டரீ கம்பொழி புனல வன்சடா
மண்டல நிறைந்துபோய் வழிந்து சோரவே.

அயாவுயிர்த் தழுகணீ ரருவி மார்பிடை
உயாவுறத் திருவுள முருகப் புல்லினான்
நியாயமத் தனைக்குமோர் நிலயு மாகினான்
தயாமுத லறத்தினைத் தழுவி யென்னவே.

புல்லின னின்றவன் புனைந்த வேடத்தைப்
பன்முறை நோக்கினான் பலவு முன்னினான்
அல்லலி னழுங்கினை யைய வாளுடை
மல்லுயர் தோளினாய் வலிய னோவென்றான்."

12. விபீஷணனுக்கு இராமன் அபயங்கொடுத்து அங்கீகரித்த காலத்தில் விபீஷணனைச் சேர்க்கக்கூடாதென்று ஆக்ஷேபித்த சுக்ரீவனைப் பார்த்து இராமன் பேசுகையில், "சகோதரர்களெல்லாம் பரதனைப் போலேயே யிருப்பார்களென்று எதிர்பார்க்கலாமா" என்று சொன்னார். இது இலக்ஷ்மணன் முன்னிலையில் சொல்லப்பட்டது. பிறகு குறித்த காலத்தில் இராமன் திரும்பிவாராதது கண்டு பரதன் அக்நியில் விழுந்து உயிர்துறக்க முயன்றபொழுது அவனைப்பார்த்து கௌஸல்யை சொல்லுவது:—

"எண்ணில் கோடி யிராமர்க ளென்னினும்
அண்ண னின்னரு ளுக்கரு காவரோ

புண்ணியம்மெனு நின்னுயிர் போயினல்
மண்ணும் வானு முயிர்களும் வாழுமோ''

என்று சொன்னள்.

13. பரதனை ஸாத்விக குணம் நிறைந்த பரம பாகவதனென்று பெரியோர்கள் கொண்டாடுகிற பிரகாரம் இராமன் அயோத்திக்குத்திரும்பி வரும் வரையிலும் தவம்புரிந்து,பிரமசரியம் உபாசனை, பக்தி, யோகம், கர்மம்,ஞானம், தியாகம் இவைகளினல் சிறப்புவாய்ந்தவனகப் பரதனே விளங்கியிருந்தான் என்பது இராமாயணத்தால் நன்கு விளங்குகின்றது.

"അനന്യാശ്ചിന്തയന്തോമാം യേ ജനാഃ പൎയ്യുപാസതേ।
തേഷാം നിത്യാഭിയുക്താനാം യോഗക്ഷേമം വഹാമ്യ
ഹം ॥"

என்கிற லக்ஷணத்திற்குப் பரதனே ஒப்பற்ற இலக்ஷ்யமாகின்றான் பூர்வ கருமத்தினல் முக்குணங்களுக்கும் வசப்பட்டு ஸம்ஸாரிகளாகி அலைகின்ற ஜீவர்களுக்கு நல்ல கதியைக்காட்டி உபதேசம் செய்வது பரதனுடைய சரித்திரமே யன்றி வேறன்று.

"ആൎത്തോജിജ്ഞാസുരൎത്ഥാൎത്ഥീജ്ഞാനീ ച ഭരതൎഷഭ"

என்று சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம், ஈசுவர பிரத்தியக்ஷத்திற்கு நியத பூர்வவிர்த்தியாயிருப்பது ஆர்த்தி என்னும் விஷாதம், அறிய வேண்டுமென்னும் நோக்கம், ஒரு அர்த்தகாங்கை்ஷ, ஞானம் இவைகளில் ஒன்றாகும் விஷாதத்தினல் கஜேந்திரனும், ஜிக்ஞாஸையினல் துருவனும், பாசுபதம் பெறுதலாகிய அர்த்தகாங்க்ஷையினல் அர்ச்சுநனும் பகிரதனும், ஞானத்தினல் பிரஹ்ம நிஷ்டர்களான பற்பல தபோதநர்களும் ஈசுவர ஸாக்ஷாத்காரத்தை அடைந்தார்கள். அந்த நான்கு பண்புகளும் ஒருங்கே கூடி பரதனிடத்தில் விளங்கி நின்றன.

14. உபாஸனைக் கிரமத்தில் இராமனையே தன்னுயிராகக் கொண்டு எப்பொழுதும் அவனுடைய தியானத்தையே செய்து

கொண்டு அகங்கிரக உபாஸனையையும், தன்செயலனைத்தும் இராமனுடைய செயலென்று கருதி அச்செயல்களுக்குத் தான் ஒரு அங்கமாக மட்டுமிருந்து இராமனையே அங்கியாகப் பாவித்து நடந்தமையால் அங்காவபத்த உபாஸனையையும், பாதுகையை இராமனே என்று அதற்கு ஸகல வழிபாடுகளையும் செய்து வந்தமையால் பிரதீக உபாஸனையையும் பரதன் விதிதவறாது அநுஷ்டித்துக் காட்டியிருக்கின்றான். உயர்ந்த மநுஷ்யனாகஇருப்பவன்.

(1) தன்குலத்தின் பெருமை காத்தல் (2) தன்பெற்றோரை வசையினின்று மீட்கல் (3) உடன் பிறந்தாருடன் பற்று (4) தர்மம் வழுவாமை (5) அன்புடைமை (6) ஈசுவரனை வழிபடுதல் என்ற குணங்களையுடையவனாக இருப்பான்.

(1) தற்குலத்தின் பெருமை காத்தல்.

"என்புகழ் கின்றதேழை யெயினனே னிரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை யொளிகளைத் தவிர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்க ளெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டா யுயர்குணத் துரவுத் தோளாய்."

என்று குஹன் சொல்லியிருக்கிறான்.

(2) தன் பெற்றோரை வசையினின்று மீட்கல்.

"முழுதுலகளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும்
வழுவின னதனை நீக்க மன்னனைக் கொணர்வான் வந்தேன்."

என்றுசங்கற்பம் செய்து நிறைவேற்றினான்.

(3) உடன்பிறந்தார் பற்று. (4) தர்மம் வழுவாமை.

மேற்கூறியிருப்பதே போதுமானது.

(5) அன்புடைமை

கௌஸல்யையே வியந்திருக்கின்றாள்.

(6) ஈசுவரனை வழிபடுதல்

பரதனுடைய செயல்கள் இராமனை வழிபடுதலாகி அவனைப் பரமபாகவதனாகச் செய்தன.

மேற்கூறியவைகளினால் பரதனுடைய சிறப்புவாய்ந்த நற்குணங்கள் நமக்கு நன்கு புலப்படுகின்றன.

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

## ஸஹாரா பாலைவநத்தைக் கடலாக்குதல்.

---

பிரான்சு தேசத்து எஞ்சினீர், ஸ்ரீமாந் லெஸ்ஸெப்ஸ் (Lesseps) என்பார் முன்னர், சுயேஸ் பூசந்தியை (Isthmus of Suez) ஜலசந்தியாகச் செய்து பெயர்போன சுயேஸ் வாய்க்காலை (Suez Canal) உண்டுபண்ணினார். அவரே பின்னர், பநாமா பூசந்தியை (Isthmus of Panama) ஜலசந்தியாகச் செய்து பநாமா வாய்க்காலை ஏற்பாடு செய்ய யுக்திகளையும், உபாயங்களையும் தெரிவித்தார். அவைகளை அநுசரித்து, பநாமா வாய்க்காலை அமெரிக்காவின் ஐக்ய மாகாணத்தார் தோண்டியிருக்கிறார்கள். வருகிற வருஷம் புகைக் கப்பல் பாய்க்கப்பல் முதலியவை அதில் ஓடும். அதே பிரான்சு தேசத்தின் ஒரு எஞ்சினீர் ஆபிரிக்கா கண்டத்திலுள்ள மணல் அடர்ந்ததும், புற் பூண்டு ஒன்றுமில்லாததுமான ஸஹாரா பாலைவநத்தை சமுத்திரமாகச் செய்விக்கலாமென்றும், அதனால் உலகத்திற்கு நலமுண்டாகுமென்றும், எத்தனையோ ஆயிரக்கணக்கான சதுர மைலுள்ள ஜநங்களில்லாத காலிப்பொட்டல் ஜநங்கள் வஸிக்க அருகமாகுமென்றும், உலகத்தின் பிரகிருத வியாபார முதலிய அமைப்பு முற்றும் மாறுமென்றும் சொல்லுகின்றார். இஃது உண்மைதான், விளையாட்டன்று. இந்த எண்ணமும் உத்தேசமும் நிறைவேறுதல் மிகவும் சிரமமானது தான். இப்போது மேல்நாட்டில் (Engineering Art) யந்திரத்தொழில்பற்றிய சாஸ்திரம் பல துறைகளில் அதிக அபிவிருத்தியை அடைந்திருக்கிறது. இராமேசுவரத்திற்கும் மன்னார் தீவுக்கும் வாராவதி கட்ட உத்தேசித்திருக்கின்றார்கள். எத்தனையோ அசாத்தியமானவை என்று சொல்லப்பட்ட அற்புதமான வேலைகளை மேல்நாட்டு எஞ்சினீர்கள் செய்து முடிக்கின்றார்கள். ஆபிரிக்காவின் வடக்கிலுள்ள மத்யதரைக் கடலினின்றாவது, அதன் மேற்கிலுள்ள அட்லாண்டிக் சமுத்திரத்தினின்றாவது, ஒரு வாய்க்காலைத் தோண்டி அந்த மணல் வநாந்தரத்தில் விடலாமெனறும், அம்மணல் வநாந்தரத்தில் உத்தேசம் தென்வடல் 1000 மைல் அகலமும், கிழமேல் 2000 மைல் நீளமுமுள்ள பாகத்தைக் கடல்நீர்ப்பரப்பாய்ச் செய்தல் கூடுமென்றும், இவ் வநாந்தரம் ஒரே சமப்பரப்பாய் இல்லாவிடினும் அதன் பெரும்பான்மையான பாகம் சமுத்

திரத்திற்குத் தாழ்ந்து இருக்கிறதென்றும், அப்படி நீரைக் கட்டினால், சராசரி ஆழம் 200 அடிக்கு மேலாக இருக்குமென்றும், அநேக இடங்களில் 1000 அடிக்கு மேலிருக்குமென்றும், அதன் பரப்பில் அநேக இடங்கள், இப்போது மேடாக இருக்கின்ற இடங்களும், மலைகளும், சௌகர்யமான தீவுகளாக அமையுமென்றும், இந்த விஸ்தாரமான கடலில் புகைக்கப்பல்களும் பாய்க்கப்பல்களும் யாத்திரைகள் செய்யலாமென்றும், இந்தப் பாலைவையச்சுற்றுமுள்ள நாடுகள் இப்போதும் நிலவளமுள்ளவைகளாக இருந்தாலும் நீர்வளம் மழைவளம் இன்மையால் பாழாக இருக்கின்றனவென்றும், அவைகளின் மத்தியில் சமுத்திரம் ஏற்படவே, அவைகளின் சீதோஷ்ண நிலைமை (Climate) முற்றும் மாறும் என்றும், அதனால் மழை அதிகமாக வருஷித்து அதிக நீர்வளம் உண்டாகி பயிர் பச்சைகள் ஏற்பட்டு ஜனங்கள் வஸிக்க அருகமாகுமென்றும், பிரகிருதத்தில் உலகத்தில் முக்கியமாக மேல்நாட்டில் ஜந நெருக்கம் அதிகமாக ஏற்பட்டு ஜனங்களின் சௌகர்யங்கள் குன்றிக் கஷ்டப்படும் சமயத்தில், ஆபிரிக்கா கண்டத்தின் குடிகள் இல்லாமலிருக்கின்ற பெரும்பான்மையான பாகம் குடியேறும்படியாக அமையுமென்றும், பின்னும் அநேகவிஷயங்களை Scientific American என்னும் பத்திரிகையில் ஒரு அறிஞர் விஸ்தாரமாக எழுதியுள்ளார். இது சமீபத்தில் நடக்காவிடினும், அறிஞர் அநேக வருஷங்களுக்கு மநோராஜ்யம் செய்வதற்கு இது ஒரு பெரிய விஷயமாகும். சங்கற்பந்தான் கார்யமாகக் கடைமுறையில் முடிகின்றது. இதும் ஒருகாலத்தில் கார்யமாக ஏன் முடியாது? மேல்நாட்டாரிடம் விக்ஞானப்பயிற்சியும், உறுதிப்பாடும், விடாமுயற்சியும், ஜனங்களின் ஐக்யமும், கூட்டுறவும் இருக்கின்றன. ஆதலால் இதையும் அவர்கள் சித்தி செய்வார்கள். எல்லாம் ஈசன் செயல்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்—குறள்

ஆத்மநாதன்.

# கீழாகத் தள்ளுண்ட ஜாதியாரின் நிலைமையை நலப்படுத்தும் முறை.

இப்போது நம்தேசத்தில் காசி முதல் கன்யாகுமரி வரை பல பெயர்களால் அழைக்கப்படும் தீண்டாத ஜாதியார்களின் ஜனத் தொகை சுமார் 6 கோடி என்று எண்ணலாம். இவர்கள் பிரகிருத தள்ளுண்ட நிலைமைக்கு எக்காரணத்தால் வந்திருக்கிறார்கள் என பதை விஸ்தாரப்படுத்தல் கூடாமையாக இருக்கிறது. பலர் பல காரணங்கள் சொல்லுவார்கள். சிலர் அபிப்பிராயத்தில் மேலான ஜாதியார்களின் அக்கிரமமும் கொடுமையும் இவரதிந் நிலைமைக்கு முக்கிய காரணமாகும். ஒருகாலத்தில் இவர்கள் இத்தேசத்தின் பூர்வகுடிகள் என்றும், உயர்ந்த நாகரீகம் பெற்றவர்களாக இருந் தார்கள் என்றும், மற்றைய ஜாதியார்களால் ஜயிக்கப்பட்டபிறகு, தாழ்ந்த நிலைமைக்குத் தள்ளுண்டார்கள் என்றும் சொல்லப்படு கிறது. வேறு சிலர் அபிப்பிராயத்தில், ஆரியர்கள் இந்தியாவில் பரவி இந்தியாமுழுமையும் குடியேறியபிறகு, அவர்களின் உயர்தர நாகரீகத்தை அநுசரித்து நடக்க இயலாதவர்கள், காலக்கிரமத்தில் கீழான ஆசாரங்களைப்பெற்றும், கீழான மாம்ஸ பக்ஷணிகளாகியும், பிறர் வெறுக்கும்படியான உடைகள் உடுத்தும், அசுத்தமான இடங்களை நாடியும் இருப்பவர்களாயினார்கள். மேனாட்டார் ஒரு தேசத்தையல்லது ஒரு நாட்டை ஜயித்துக் கைப்பற்றினார்களாகில், அத்தேசத்தில் உள்ளவர்கள் தம்மைப்போல ஒழுகமுடியாதவர்களைப் பலவிதமாக ஹிம்ஸித்து அவர்களைத் தொலைத்து அவர்களை முற்றும் அற்றுப்போகும்படி செய்தல் வழக்கம். உதாரணமாக அமெரிக்கா தேசத்திலிருந்த பூர்வீகர்களான சிவப்பு மனிதர்கள் எங்கே போயினர்? ஆஸ்டிரேலியா கண்டத்திலிருந்த பூர்வீக குடிகள் எங்கே போயினர்? அநேகமாகப் பொய்த்துப் போயினர். அவர்கள் க்ஷீணதசை அடைந்து முற்றும் நாசமடைந்தமைக்கு முக்கிய காரணம் ஐரோப்பியர்களின் கொடுமையான நடத்தையாம். இக்காரணத்தை நன்கு உணர்ந்த சில ஆங்கிலேயர்கள் மகமுருகி பூர்விகர்களைப் பாதுகாக்கும் (Aborigines Protection Society) சபை ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இச்சபை முற்காலததிலேயே

ஏற்பட்டிருக்குமாகில் அதிக நலமாயிருந்திருக்கும். இப்பொழுதும் அதனுல் செய்பக்கூடிய சொற்ப நன்மையைச் செய்கிறது. இப்போதும் தென் ஆபிரிக்காவிலும் காநடாவிலும் மற்றைய நாடுகளிலும் வெள்ளைக்காரர்களால ஹிந்துக்கள், சீனர்கள் முதலிய வர்ண மனிதர்கள் (Coloured races)படும் இடையூறுகளையும், ஹிம்ஸைகளையும் நினைப்போமாகில், நம்தேசத்தார் கீழான ஜாதியார்களுக்கு நேராக யாதொரு கொடுமையும் முன்செய்ததாகவாவது, இப்போது செய்பவாவது இல்லை எனறு உறுதியாகச் சொல்லலாம். ஆனுல் அக்கீழான ஜாதியாரை மேலான ஸ்திதிக்குக் கொண்டுவர யாதொரு பெரிய பிரயத்தநங்களும் நம்மவர்கள் இதுகாறும் செய்யவும் இல்லை. கீழானவர்கள் பாடு அவருண்டு. மேலானவர்கள் பாடு அவருண்டு என உபேக்ஷையாக மேலான ஜாதியார்கள் இருந்திருக்கிறார்கள். இது குற்றமே, இது பெரிய குற்றமே. மேலான ஜாதியார் என்ற கௌரவமான பெயரை வகித்தலுக்கு ஏற்ப கீழான ஜாதியார் நலம்பெறும்படி, தாங்கள் ஒழுகுதல் வேண்டும். அதனுல் மேலான ஜாதியார், கீழான ஜாதியாரைக் கைதூக்கி விடுதல் ஒரு பெரிய கடமையாகக் கருதல் வேண்டும். அதற்குரிய கைங்கரியம் செய்தல் வேண்டும்.

சமீபத்தில் சர்க்கார் ஜநத்தொகையின் கணக்கு எடுத்தகாலத்தில், கீழான ஜாதியாரை ஹிந்துக்கள் என்ற வகுப்பில் சேர்க்கக் கூடாது என கிறீஸ்த வர்களும் முகம்மதியர்களும் தெரிவித்தார்கள். கணக்கு எடுக்கும் பெரிய அதிகாரியும் ஒருவாறு இவ்வபிப்பிராயத்துக்கு இணங்குவார்போல் தோன்றியது. மேலான ஜாதியான ஹிந்துக்கள் கீழான ஜாதியார்களும் ஹிந்துக்களேயென்றும் அவர்களை ஜநக்கணக்கில் அவ்விதமே தாக்கல் செய்யவேண்டுமென்றும் பலமுறை கூப்பாடு போட்டார்கள். இந்த விஷயத்தைக் கவனிக்குங்கால் இராஜாங்க முறையில் ஒரு பெரிய உண்மை வெளியாகிறது. அதாவது, ஹிந்துக்களுடைய அபிப்பிராயத்தில் தாங்கள் கீழான ஜாதியாரான 6 கோடி ஜநங்களையும் சேர்த்துக் கொண்டால் தாங்கள் பெருங்கூட்டத்தவர்களாக ஆவார்களென்றும், அதனுல் இராஜாங்கத்தாருக்குத் தங்களுக்கு வேண்டிய

முறைப்பாடுகளைத் தெரிவிப்பதானது, அதிக பலமாகவும் பலவத்தாகவுமிருக்குமென்றும் கருதினார்கள். மஹம்மதியர்களும் கிறிஸ்தவர்களும் ஷை கீழான ௬ கோடி ஜநங்கள் ஹிந்துக்களாகப் பாவிக்கப்படும் பக்ஷத்தில் ஹிந்துக்கள் பலிஷ்டர்களாவார்களென்றும், அதனால் தங்களுக்கு பலக்குறைவு நேரிடுமென்றும் கருதினார்கள். இப்போது 6 கோடி ஜநங்களையும் ஹிந்துக்களாகப் பாவிக்கவேண்டுமென்று வற்புறுத்தி விண்ணப்பஞ் செய்து கொண்ட ஹிந்துக்களின் மேலான ஜாதியார்கள், கீழான ஜாதியார்களுக்கு, அவர்களும் ஹிந்துக்கள் என்றே பாவிக்கப்படுமாறு, அவர்களைக் கைதூக்கி என்ன உதவியைச் செய்ய முயலுகின்றார்கள்? ஆங்காங்கு ஆங்கிலங்கற்ற ஹிந்துக்கள் சிற்சிலர் கூடி கீழான ஜாதியார்மேல் பரிதாபத்துடன் மட்டும் பேசுகின்றார்களே தவிர கார்யாம்சையில் ஒன்றையும் காணோமே! நம்மவர்கள் கீழான ஜாதியார்களுடைய நிலைமையைக் கண்டு உண்மையில் அநுதாபப்பட்டு அவர்களுக்கு நலம் புரிய வேண்டுமானால் அடியிற்கண்ட சில விஷயங்களை நம்மவர்கள் நடத்தவேண்டும்:—

1. இப்போது கீழான ஜாதியாரின் அபிவிருத்தியில் நோக்கமுள்ள சில சபைகள் சில இடங்களில் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவைகள் வருவாயில்லாமல் உத்தேசித்த கார்யங்களை நிறைவேற்ற முடியாமலிருக்கின்றன. அச்சபைகள் முதலில் வருவாயை விருத்தி செய்யவேண்டும். அதற்காகச் சிலர் கங்கணங் கட்டிக்கொண்டு உண்டியல் கலயங்கள் மூலமாகவும் வேறுஸாதநங்களைக் கைக்கொண்டும், நேரிலும் பலவூர்களிலிருந்து பணம் வசூலிக்கவேண்டும். பல ஊர்களில் உத்ஸவங்கள் நடக்கின்றன. அக்காலங்களில் உபந்யாஸகர்களை யனுப்பிக் கீழான ஜாதியாரின் நிலைமையைப் பொது ஜநங்களுக்கு வற்புறுத்திச் சொல்லும்படியாகச் செய்யவேண்டும். அக்காலங்களில் உண்டியல் கலயங்கள் மூலமாய்ப் பணமும் வசூலிக்கலாம். அறுவடைக் காலங்களிலும் அவ்விதமே செய்தல் கூடும்.

2. ஒவ்வொருவூரிலுமுள்ள கீழான ஜாதியார்களின் நிலைமையை வியக்தமாய்த் தெரிந்து கொண்டு அததற்கேற்ப சீர்திருத்த

முறையை நாடவேண்டும். கீழான ஜாதியார்கள் என்றால் ஒரே மாதிரியாக இருக்கின்றனரல்லர். அவர்களுடைய குறைகளும், அசௌகர்யங்களும் பற்பல தேசகாலாதிகளுக்குத் தக்கவாறு வேறுபடுகின்றன. அந்நிலைமைகளுக்குத் தக்கவாறே சீர்மைப் படுத்தும் முறைகளும் வேறுபடும். சுகாதார விஷயங்களும் ஸமயமுறை விஷயங்களும், அன்னோர்களுடைய ஒழுக்கங்களும் ஆசாரங்களும் வெறுக்கத்தக்கவைகளாக இருக்கின்றன. அவர்களுக்கு ஹிந்து ஸமயமுறைகளையும், வீடு சுத்தம், உணவு சுத்தம், சரீரசுத்தம், இவைகளையும் போதிக்கும்படியாகத் தக்க உபந்யாஸகர்களை அவர்களிடம் வேலைசெய்யும்படியாக அனுப்பவேண்டும். அவர்களால் நடத்தக் கூடிய கைத்தொழில் முயற்சிகளை அவர்களுடைய வாலிபர்களுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டும், அக்கைத்தொழில் முயற்சிகளில் சீர்திருத்தத்தையும் உண்டுபண்ணவேண்டும். பனை ஓலையாலும், தென்னைஓலையாலும், கோரையாலும், பிரம்பாலும், மூங்கிலாலும், தென்னை, பனை முதலிய நார்களாலும் இக்கால நாகரீகத்திற் கொத்தபடியாய் பாய்கள், பெட்டிகள், விசிறிகள் இன்னும் நாநாவிதமான நகைகளைச்செய்து வரும்படி அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும். சொற்பப் படிப்பேனும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும்; அவர்களுக்கென்று எலிமெண்டரி பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தல் வேண்டும். தவிரவும், மேலான ஜாதியார்களுடைய பள்ளிக்கூடங்களில் சமய முறைகளைச் சரியானபடி கற்பிக்கவேண்டும். கீழான ஜாதியார்களும் இந்தியாவின் பெரிய குடும்பத்தின் பாகஸ்தர்கள்என்பதை மேலானஜாதியாரின் மாணவர்களின் மநங்களில் பதியவைக்கவேண்டும். இந்தியாதேசமுழுதும் நலம்பெற வேண்டுமானால், இந்தியாவிலிருக்கிற எல்லா ஜாதியாரும் இந்தியா என்னும் ஒரு விராட்புருஷனின் பல அங்கங்களென்றும், பல கரணங்களென்றும், அவ்விராட்புருஷனின் சரீரம் நேர்மையாக நடைபெறவேண்டுமானால், அவ்வங்கங்கள் குறைவின்றி சுகமாக நடைபெறவேண்டுமென்றும், ஒன்றின் குறை மற்றவைகளைத் தாக்குமென்றும், அங்கங்கள் தனித்தனியாகத் தான்பெரிது, தான்பெரிது என்று இறுமாப்புக் கொண்டு அதனதன் கடமையைச் செய்யாவிடில் சரீரம் வியாதிக் குள்ளாகிச் சீர்கெட்டுச் சிதைந்து நாச

முறும் என்றும், பலமுறை, நம்மவர்களில் அறிஞர்கள் ஸமயம் நேரும்போதெல்லாம் இவ்வித உண்மைகளைப் பொதுஜனங்களின் மனங்களிற் பதியவைக்கவேண்டும். ஜாதிகளுக்குள் உயர்வு தாழ்வு என்பது அவர்களின் செல்வப்பெருமை, பிறவிக்குலத்தின் பெருமையைப் பற்றியதன்று. ஆனால் அவர்களின் உத்தரவாதத்தின் பெருமையையே பற்றியது. உயர்குலத்திற் பிறந்தவன், உயர் ஜாதியில் பிறந்தவனென்றால் உயர்ந்த உத்தரவாதத்தை வகித்தவனென்பதுதான் பொருள். இதுவே ஒப்புரவை அறிதல் என்ற உயர்வான தர்மம்.

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"
"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"—திருவள்ளுவநாயனார் குறள்.

3. ஆனால் இவர்கட்குக் கல்விகற்பிப்பதற்கு உபாத்யாயர்கள் பலர்வேண்டுமே, உபந்யாஸகர்கள் பலர்வேண்டுமே என்ற ஆக்ஷேபம் சொல்லக்கூடும். இவர்களைக் காலக்ரமத்தில் தான் உண்டு பண்ணிக்கொள்ளவேண்டும். நம்தேசத்தில் ஸாதுக்கள், ஸந்யாஸிகள், பண்டாரங்கள், மஹந்துக்கள், மடாதிபதிகள் என்ற பல நாமங்களாலழைக்கப்படும் ஸாதுக்கள் 50 லக்ஷத்துக்கு மேலாக விருக்கிறார்களென்று ஜநக்கணக்கால் தெரியவருகின்றது. இவர்களிற் சிறுபான்மையோரைத் தவிர பெரும்பான்மையோர் சோம்பலாளிகளே. அவர்கள் பூமிக்குப் பாரமாக இருக்கிறார்களே தவிர அவர்களால் ஜநஸமூஹத்திற்கு யாதொரு நன்மையும் கிடையாது. இவர்களை பர்மாதேசத்திலிருக்கின்ற பிக்ஷுக்களைப் போலக் கல்வி கற்பிக்கும் உபாத்யாயர்களாக அமர்த்திக்கொள்ளலாம்.

4. இந்த விஷயத்தில் பிராஹ்மண, வேளாள சைவ மடாதிபதிகள் பலவகையில் உதவிபுரியலாம். அவர்களின் ஸாதகத்தை நாம் நாடவேண்டும். ஆனால் மேற்கண்ட விஷயங்கள் ஒருநாள், ஒரு மாஸம், ஒருவருஷம் இவைகளுக்குள் நடத்தி முடிக்கக்கூடியவைகளல்ல. பல நாள், பல மாஸங்கள், பல வருஷங்கள், பல இடங்களில், பலர் கூடி விடாமுயற்சியுடன் வேலைசெய்து வந்தால் நாளடைவில் நம் தேசம் நலம் பெறும்.

சிவராமன்.

———

## புத்தக வரவு.

**பாகவத வினாவிடை இரண்டாம் பாகம்:**—இதன்கண் கடைசி மூன்று ஸ்கந்தங்களடங்கியிருக்கின்றன. முதல் பாகம் இயற்றிய ஆசிரியர் ஸ்ரீமான் ஆ. வி. கஸ்தூரிரங்க ஐயர் பி. ஏ. அவர்கள் தான் இந்த இரண்டாம் பாகத்தையும் இயற்றியவர். இது மைலாப்பூர் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாரால் பிரசுரம் செய்யப்பெற்றிருக்கிறது. இராமாயண பாரத வினா விடைகள் போலவே இப்புத்தகமும் எளிய தமிழ் நடையில் அழகாய் அமைந்துள்ளது. அநேக இடங்களில் கதையை விவரித்து மனத்தில் பதிப்பிக்கும்படியாக 10 சித்திர படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய புத்தகங்கள் நம் நாட்டில் வெளிவருகின்றமையால், புராணங்களில் புதைந்துள்ள ஞான விஷயங்களை சிறுவர்களும் சிறுமிகளும் கூட எளிதில் உணரும்படியான சௌகர்யம் ஏற்பட்டிருக்கிறது. இதன் விலையும் ரூ 1 தான்

---

**கம்பனும் கலைமகளும்:**—இது கும்பகோணத்திலிருக்கும் டாக்டர், எஸ். சந்திரசேகரர் அவர்களால் இயற்றப்பட்டது. இதன்கண் தமிழ்க் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பனின் சரித்திரமும், கலைமகள் அவருக்கு பல ஸமயங்களில் தோன்றி அவருக்கு அநுக்கிரகம் செய்தருளிய விஷயங்களும் எளிய தமிழ் நடையில் எழுதப்பெற்று, உற்றவிடங்களில் பல செய்யுட்களுடனும் இந்நூல் அமைந்துள்ளது. இப்புத்தகத்தின் அருமையை இதன் இரண்டாம் பதிப்பு விரைவில் வெளிவந்திருக்கின்றமை காட்டுகின்றது. இதன் விலை அணா 4 தான்.

---

**வேதாந்த மநந சிந்தாமணி:**—இது சென்னையில் வஸிக்கும் ஸ்ரீமத் கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் திரட்டி அருளிய அருமையான பெரிய ஞானத்திரட்டாம். இதன்கண், 227 ஞானநூல்களினின்று எடுத்துத் தொகுக்கப்பட்ட செய்யுட்கள் 12020. 1747 பக்கங்களுள்ள பெரிய புத்தகமிது. ஞான முறையிற் பயிலுகின்றவர்களுக்கு முக்யமாய் மநநம் என்ற படியில் நிற்கின்றவர்களுக்கு இப்புத்தகம் இன்றியமையாத சாதனம். இதை பிரஹ்மஞான சபையிற் சேர்ந்த தமிழர் ஒவ்வொருவரும் தமக்குற்ற பிரியா ஞானத்துணையாக மதிக்க வேண்டியது. பல இடங்களிலுள்ள ஞானப்பாசுரங்களை ஒருங்கே சேர்த்து இப்புத்தகத்தை சாது ஜனங்கள் உபகாரார்த்தம் வெளியிட்டிருக்கும் ஸ்ரீமத் கரபாத்திர சிவப்பிரகாச ஸ்வாமிகளுக்கு நாம் செய்யும் கைம்மாறு யாது உளது? அதை வாங்கிப்படித்து மநநம் செய்தலேயாம். இதன் பெருமையை உத்தேசிக்க இதன் விலை ரூ 4 மிகவும் சொற்பமானது. நல்ல கடிதத்தில், நல்ல

355



எழுத்தில், தெளிவாய் இப்புத்தகம் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இதன் வெளிக்கட்டிடமும் உயர்வாக இருக்கிறது. வேண்டுவோர், சென்னை தம்பு செட்டித் தெருவு, ரிப்பன் பிரஸிலும், சென்னை கோமளேசுவரன் பேட்டை ஸச்சிதாநந்தம் பிரஸிலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

---

## பத்திரிகை வரவு.

வேதாந்ததீபிகை என்னும் ஸ்ரீ அகோபிலமட சிஷ்யசபைப் பத்திரிகை சுமார் இரண்டு வருஷமாக தமிழ் பாஷையில் ஷை சபையின் காரியதரிசியால் மாதந்தோறும் நடத்தப்பெற்றுவருகிறது. வைஷ்ணவ ஸம்பிரதாயத்தை முக்கியமாக ஸ்ரீமத் ராமாநுஜாசார்யர் அவர்களின் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைப் பரவச் செய்வதற்காகவும் அகோபில மடத்தின் சீர்திருத்தங்களை வெளிப்படுத்துவதற்காகவும் ஏற்பட்ட பத்திரிகை இது. சிறந்த வித்வான்களால் அரிய பெரிய விஷயங்கள், வியாஸரூபமாக இப்பத்திரிகையில் வெளிவருகின்றன. முக்யமாக பக்திமார்க்க விஷயங்கள் இதில் அடிக்கடி பிரசுரமாகி வருகின்றன. சென்ற ஐப்பசிமீ ஸஞ்சிகையில் பகவத்கீதா தாத்பர்யம் என்பதைப்பற்றி சுருக்கமாய் நன்றாய் ஒரு வியாசம் எழுதப்பட்டுள்ளது. இத்தகைய பத்திரிகைகள் அந்தந்த மதாசார்யர்கள் உபதேசித்துள்ள ஞாநம்சங்களை பிறமத தூஷணமின்றி வெளிப்படுத்தல் மிகு நலம் பயக்கும். பிரகிருத பத்திரிகையின் வருஷ சந்தா ரூ. 2 தான். இப்பத்திரிகையை அறிஞர் எல்லாரும் முக்கியமாய், வைஷ்ணவ ஸம்பிரதாயத்தை அவலம்பிக்கிறவர்கள் ஆதரிக்கவேண்டுவது.

---

## சமாசாரம்.

சென்றமீ 10, 17, 24உ களில் மாதா ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் "மரணமும், அதற்குப் பின் புவர்லோக, ஸுவர்லோகங்களில் ஜீவனின் கதியும், அதன் அநுபவமும்" என்ற விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாய், சென்னை, விக்டோரியா சபா மண்டபத்தில், 3 உபந்யாஸங்கள் செய்தார்கள். நூற்றுக்கணக்காய் ஏராளமான ஜனங்கள் கூடி மிகவும் சிரத்தையுடன் சிரவணஞ் செய்தார்கள். மேற்படி மண்டபத்திலிடமில்லாமையால் அநேகர் வெளியிலேயே நிற்கும்படி நேரிட்டது. அவர்களை உத்தேசித்து, ஒரு விசாலமான நாடகக் கொட்டகையில் அம்மையார் ஷை விஷயங்களைச் சுருக்கமாய் சென்றமீ 30உ சாயங்காலம் மறுபடியும் உபந்யஸித்தார்கள். ஆயிரக்கணக்காய் ஜனங்கள் கூடினார்கள்.

அத்வைத உபந்நியாஸம் செய்கின்ற வித்வாம்சர்களுக்கு ஸம்பாவனை அளிக்க மகா-ள-ள-ஸ்ரீ காலஞ்சென்ற ஹைக்கோர்ட்டு ஜட்ஜி பி. ஆர். சுந்தர ஐயர் அவர்கள் ஒரு நிதி (Fund) ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது கும்பகோணத்தில் நடைபெறும் அத்வைத சபையின் விசாரணைக்குள் இருக்கின்றது. இந்நிதியின் உதவியினால், சென்றமீ 14௳ முதல் 25௳ வரையில் சாயங்காலம் 6 மணி 15 நிமிஷத்திற்கு ஒவ்வொரு தினத்திலும் மதுரை, தர்ம சாஸ்திர சபையின் மண்டபத்தில், பிரஹ்மஸ்ரீ கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகள் அவர்கள், ஸ்ரீமத்சங்கராசாரியர் அவர்களால் அருளிய தசசுலோகியென்னும்பிரகரணத்தை ஆதாரமாகவைத்துக்கொண்டு அத்வைத சித்தாந்த முறையில் நன்றாய் உபந்நியாஸம் செய்தார்கள். இந்த தசசுலோகி என்பதற்கு, மதுஸூதந ஸரஸ்வதி சுவாமிகள் சித்தாந்த பிந்து என்னும் பெயர்பெற்ற பாஷ்யம் செய்துள்ளார். இச்சித்தாந்தபிந்துவிற்கு பிரஹ்மாநந்த ஸரஸ்வதீ என்பவர் டீகா செய்திருக்கின்றார். தசசுலோகியும் அதன் வியாக்யாநமாகிய சித்தாந்த பிந்துவும், பிரஹ்மஸ்ரீ இராமசந்திர சாஸ்திரியார் அவர்களால் தமிழில் ஒரு புத்தகமாக மொழி பெயர்க்கப் பெற்று, சென்னை ஸ்ரீமாந் வடிவேலு செட்டியார் அவர்களால் பிரசுரித்தம் செய்யப்பட்டிருக்கின்றது. இதன் விலை அணா 10 தான். டை கிருஷ்ணசாஸ்திரிகளின் உபந்நியாஸத்தைச் சிரவணம் செய்தவர்கள், மேற்கண்ட புத்தகத்தை வாங்கிப்படிப்பார்களாகில் தெளிவு பெறுவர்.

அடையாற்றில் பிரஹ்மஞாந சபையின் வருஷக் கூட்டம்:—(Theosophical Convention). இந்தமீ 26௳ முதல் 31௳ வரையில் சென்னை அடையாற்றில் பிரஹ்மஞாநசபையின் வருஷக்கூட்டம் கூடும். நடைபெறும் விஷயங்களின் சுருக்கம்: 26௳ வியாழக்கிழமை காலை 9 மணிக்கு, ஜனரல் கவுன்சில் (General Council) கூடும். ஆலமரத்தினடியில் மாலை 5¼ மணிக்கு "கல்வி கற்பித்தல், ஒரு ஈசுவர கைங்கரியம்" என்பதைப்பற்றி ஸ்ரீமாந் அருண்டேல் அவர்களின் உபந்யாஸம். 27௳ வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு, தபஸ் மண்டபத்தில் (Shrine Room) சபையின் உள் வகுப்பினர்களின் (Section) கூட்டம். பகல் 12 மணிக்கு, சபையின் உபந்யாஸம் செய்யும் மண்டபத்தில் பிரஹ்மஞாந சபையின் வருஷக்கூட்டம் கூடும். தலைவரின் ஆரம்ப பிரஸங்கம், சபையின் பல தேசங்களின் வகுப்புகளினுடையவும் சில்லறைக் கைங்கர்யங்களினுடையவும் வரலாறுகள் (Reports) வாசித்தல் முதலியன. மாலை 8½ மணிக்கு, பிரச்நோத்தரம் ஸ்ரீமாந் C. W. லெட்பீடர் அவர்கள் நடத்துவார்கள். 5½ மணிக்கு ஆலமரத்தினடியில், தலைவரின் முதல் உபந்யாஸம், "பிரஹ்மஞாந தர்சநம் அல்லது பரவித்யை" என்பதைப்பற்றியது. இராத்திரி

7-30 மணிக்கு புகைப்படக்காக்ஷியின்மூலமாய் (Magic Lantern lecture) ஸ்ரீமாந் பெஸ்டு என்பார் "ஆதியாற்றுத் தோட்டத்தை விருத்திபண்ணும் முறை" என்பதைப்பற்றி உபந்யாஸம் செய்வார். 28உ சனிக்கிழமை காலை 8மணிக்கு சபையின்உள்வகுப்பினர்களின் பொதுக்கூட்டம்(General E.S.) சபையின் உபந்யாஸ மண்டபத்தில் கூடும். நடுப்பகல் 12 மணிக்கு பிரஹ்மஞான சபையின் இந்திய வகுப்பின் வருஷக் கூட்டம். மாலை 3½ மணிக்கு பிரஹ்மஞான சபையின் கைங்கர்ய வகுப்பு (T. S. Order of Service) சபையின் கூட்டம் சபா மண்டபத்திற் கூடும்.

(1) மகா-ா-ஈ-ஸ்ரீ வ. மகாதேவ சாஸ்திரியார் அவர்கள் "பிறர் நலம் பயக்கும் கைங்கர்யத்தைப்பற்றிய வேதப்பிரமாணம்" என்பதைப்பற்றி உபந்யாஸம் செய்வார்.

(2) மாதுஸ்ரீ ஜார்ஜியா காகாரின் என்பார் "கைங்கர்யத்தின் உயர் லக்ஷியமும் உண்மையும்" என்பதைப்பற்றி உபந்யாஸம் செய்வார்.

மாலை 5½ மணிக்கு தலைவரின் இரண்டாம் உபந்யாஸம், "பிரஹ்மஞான தர்சநம் மஹாத்மாக்களை அடையும் மார்க்கம்" என்பதைப்பற்றியது.

29உ ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு, பிரஹ்மஞான சபையின் உள்வகுப்பின் (Section) கூட்டம், தபஸ் மண்டபத்தில் (Shrine Room) கூடும். நடுப்பகல் 12 மணிக்கு, இந்திய வகுப்பின் வருஷக் கூட்டம் மாலை 2 மணிக்கு இந்திய புத்திரர்களின் சங்கத்தின் கூட்டம் ஸபா மண்டபத்தில் கூடும். ஸ்ரீமாந் E. A. உட்ஹவுஸ் என்பார் "பரவியிருக்கின்ற பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் புத்திரர்கள், புத்திரிகளின் சங்கம்" என்பதைப் பற்றி உபந்யாஸம் செய்வார்.

5½ மணிக்கு, ஆலமரத்தின் அடியில், தலைவரின் மூன்றும் உபந்யாஸம், "பிரஹ்மஞான தர்சநம் எல்லா மதங்களுக்கும் மூலம்"என்பதைப்பற்றியது. இராத்திரி 7½ மணிக்கு "உதயதிசைக்ஷத்திர சங்கத்தின்" கூட்டம், சபா மண்டபத்தில் கூடும்:—"மேற்கண்ட சங்கத்தின் கைங்கர்யமும் நோக்கங்களும்" என்ற விஷயத்தைப்பற்றி, ஸ்ரீமாந் அருண்டேல் என்பார் உபந்யாஸம் செய்வார்.

30உ திங்கட்கிழமை காலை 8 மணிக்கு சபையின் உள் வகுப்பினர்களின் பொதுக் கூட்டம் (General E. S.) சபாமண்டபத்தில் கூடும். நடுப்பகல் 12 மணிக்கு "பிரஹ்மஞான சபையின் கருத்தைக் கொண்டு செலுத்தும்

முறையின் உபாயம்" என்பதைப்பற்றிய விரிவான சம்பாஷணை. மாலை 3½ மணிக்கு பிரச்னோத்தரம், ஸ்ரீமாந் C. W. லெட்பீடர் என்பார் நடத்துவார் மாலை 5½ மணிக்கு ஆலமரத்தினடியில் தலைவரின் நான்காம் உபந்யாஸம் "பிரஹ்மஞான சபை, அதன் அர்த்தம், அதன் நோக்கம், அதன் தொழில் முறை" என்பவைகளைப் பற்றியது. இராத்திரி 8 மணிக்கு (Masonic Lodge) மேஸானிக் கூட்டம்.

31வ செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சபாமண்டபத்தில் கல்வி அபிவிருத்தி சம்பந்தமான சபை கூடும். விஷயங்களாவன:—

(1) "கல்வி விஷயத்தில் பாஷையின் பிரயோஜநம்" என்பதைப்பற்றி, ஸ்ரீமாந் உட்ஹவுஸ் என்பாரும்,

(2) "லங்கைத் தீவில் இரண்டாந்தர (Secondary Education) கல்வி கற்பித்தல்" என்பதைப்பற்றி ஸ்ரீமாந் உட்வார்டு என்பாரும்,

(3) "கல்வி கற்பித்தலில், இயற்கை அறிவின் நலத்தை"ப் பற்றி மாதுஸ்ரீ எப் அருண்டேல் என்பாரும்,

(4) "தென்னிந்தியாவிலுள்ள கீழின ஜாதியாரின் படிப்புமுறை" என்பதைப்பற்றி, மாதுஸ்ரீ கோபெல் என்பாரும்,

(5) பௌத்த பள்ளிக்கூடங்களில், "பௌத்தமதத்தைக் கற்பிக்கும் முறையைப்பற்றிய" உபந்யாசத்தை ஒருவரும்,

(6) "மாணவர்களுக்கு ஞாந விஷயங்களைக் கற்பிக்கும் முறையை"ப்பற்றி ஸ்ரீமாந் அருண்டேல் என்பாரும் உபந்யாஸங்கள் செய்வார்கள்.

(7) பல தேசங்களினின்று, பிரஹ்மஞாந தர்சநத்தை அவலம்பித்து நடத்தப்பெறும் கல்விச்சாலைகளின் வரலாறுகளும் வாசிக்கப்படும்.

5½ மணிக்கு ஸ்ரீமாந் B. P. வாடியா என்பார் "சந்மார்க்க முறைபற்றிய வாழ்வு" என்பதைப்பற்றி ஆலமரத்தினடியில் உபந்யாஸம் செய்வார்.

6½ மணிக்கு அதே இடத்தில், தலைவரின் (மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையாரின்) வருஷ உத்ஸவத்தின் முடிவுரை.

எல்லாம் சுபம்.

---

திருவாடி பரிஷத் கூட்டம்:—நாளது டிஸெம்பர்மீ 3௳ முதல் 4, 5 தினம் திருவாடியில் ஸம்ஸ்க்ருத வித்வாங்களின் பரிஷத் கூடும். முன் காஞ்சீபுரத்தில் கூடிய காலத்தில் எந்த விஷயங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டதோ, அதே விஷயங்களைப் பற்றி இந்த பரிஷத்திலும் ஆராய்ச்சி செய்யப்படும். ஷை பரிஷத் ஸம்பந்தமாக 250ரூ, 150ரூ, 116ரூ, என்பதான மூன்று ஸம்பாவனைகள் அடியிற் கண்ட விஷயங்களைப் பற்றி வியாஸம் முதல்தரமாக எழுதுகிறவர்களுக்குக் கொடுக்கப்படும். 1 முதல் 2 ஸம்பாவனைகள் இந்து சாஸ்திரப்படி சதுர்வித புருஷார்த்தம் என்பதைப் பற்றி எழுதுகின்ற வியாஸங்களில் முதல்தரமான இரண்டு வியாஸக்காரர்களுக்குக்கொடுக்கப்படும். இது மைலாப்பூரிலிருக்கிற மகா-௱-ஸ்ரீ V.P. மாதவராயரவர்களுடைய உபயம். சடைமகியது சிஷ்டாசாரம் இன்னது என்பதைப்பற்றி வியாஸம் எழுதுகிறவர்களில் முதல் தரமாக எழுதுகிறவருக்கு மகா-௱-௱-ஸ்ரீ ஆயுர் வேத கோபாலாசார்லு அவர்கள் செய்த உபயம்.

---

சென்ற ஜனக்கணக்கின்படி, நம் தேசத்தில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் 29½ கோடி ஜனங்கள், அவர்களுள், ஸ்திரீகள் 15¼ கோடி, புருஷர்கள் 14¼ கோடி பெயர்கள். அவர்களுள் முகம்மதியர் 2 கோடியே 30 லக்ஷம் பெயர்கள், ஹிந்துக்கள் 20 கோடியே 5 லக்ஷம் பெயர்கள். இப்படி இருந்தால் நம் தேசம் முன்னுக்கு வருவது எப்படி? கல்வி அறிவு விருத்தியானால் ஒழிய வேறுவிதமான விமோசநமில்லை. ஒவ்வொரு தநவானும் கீழ்தரப்படிப்புக் கேற்ற ஒரு பள்ளிக்கூடத்தையாவது ஏற்படுத்தல் முடியாதா?

---

நாகர்கோவிலுக்கடுத்ததும் கன்னியாகுமரிக்கடுத்ததுமான ஸுசீந்திரத்தில் பிராஹ்மணர்களுக்குக் கிளைச்சபை ஒன்று நாளது டிசம்பர்மீ 1௳ ஸ்தாபிக்கப் பெற்றது. அன்று தினம், சபையின் பல அங்கத்தினர்கள் உயர்தர விஷயங்களைப்பற்றி உபந்யஸித்தார்கள்.

---

பாவநகர் ஸம்ஸ்தானத்தின் திவானாகவிருக்கிற பிரஹ்மஸ்ரீ ப்ரபாசங்கர் அவர்களை பம்பாய் கவர்ன்மெண்டு கௌன்ஸில் மெம்பராக நியமனம் செய்திருக்கிறார்கள். அநேக வருஷங்களாக பாவநகர் ஸம்ஸ்தானத்தின் திவானாகவிருந்து நற்காரியங்கள் செய்திருக்கிறார். பிராஹ்மணோத்தமர்; கர்ம ஸந்நியாஸயோகி; ஆர்ய ஆசார சீலர்; யார்க்கும் ஸுலபர்; மிருதுபாஷி; தன்னலம் ஓம்பாது பிறர் நலம் ஓம்பும் தீரர், பிரஹ்மக்ஞான சபையில் ஆழ்ந்த பக்தியுள்ளவர். இத்தகையர் கௌன்ஸில் மெம்பராயிருத்தல் ஜனங்களுக்கும் ராஜாங்கத்துக்கும் நலம் தரும். இவர்போல் உயர்நலமமைந்த சிலரை மேல் நாட்டில் காண்பது அரிதென "பால் மால் கெஜட்" Pall Mall Gazette என்ற உயர்ந்த ஆங்கில தேசத்தில் நடைபெறும் பத்திரிகை உவந்து கூறுகின்றது.

---

**காகிதந்தால் கைத்துண்டுகள்:**—(Paper Towels) காகிதத்தால் கைத்துண்டுகள் இப்போது செய்யப்பட்டு விரிவாய் ஜர்மனி முதலான தேசங்களில் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. மூங்கில் முதலான மரங்களின் வெள்ளையான சதைப்பாகம் இதற்கு உபயோகிக்கப்படுகின்றது. பருத்திமுதலிய நூலால்செய்யப்பட்ட கைத்துண்டுகளைவிட, இந்த கைத்துண்டு மிகவும் அழகாயும், உறுதியாயும் இருக்கின்றதாம்.

---

**அமெரிக்கா கண்டத்தை முன்னரே ஹிந்துக்கள் கண்டுபிடித்தனர்:**— கொலம்பஸ் என்பார் அமெரிக்கா கண்டத்தைக் கண்டுபிடித்தாரென இதுகாறும் நாம் எண்ணியிருக்கிறோம். இது சரியன்று. இவருக்கு முன்னரே இந்திய ஆரியர்கள், அதாவது ஹிந்துக்கள் கி. மு. 1300 வருஷத்திற்குமுன் அதாவது மஹாபாரதயுத்தகாலத்தில் அமெரிக்காவுக்குச் சென்று குடியேறி அவர்கள் மதத்தையும் நாகரிகத்தையும் பரவச்செய்தார்கள் என்றும், அவர்கள் கால அளவைகளையும் அத்தேசத்தாருக்குக்கொடுத்தார்கள் என்றும் ஸ்ரீமாந் அலெக்ஸாண்டர் டெல் மார் என்ற நூயார்க் வாஸியும் (President of the Latin Chamber of Commerce) லத்தின் வர்த்தக சபையின் அக்கிராஸநாதிபதியுமானவர் பூமியினின்று வெட்டியெடுக்கப்பெற்றிருக்கின்ற, கல்வெட்டுகளாலும், கிருஷ்ண கணபதி முதலிய விக்கிரகங்களாலும், கட்டடங்களின் அமைப்பாலும் தெளிவாய் சித்தாந்தப்படுத்தி எழுதியிருக்கிறார்.

---